**கவனிக்க.**-2006.11.17 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரிசுரிக்கப்படவில்லை.



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1473 - 2006 නොවැම්බර් 24 වැනි සිකුරාදා - 2006.11.24

1473 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1114 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1116 |



வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, திசெம்பர் 01 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, நவெம்பர் 17 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத் தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப் பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவி களுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட் சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித் துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவை யேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத் தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கை யைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அர சாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதி யிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையு மாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப் பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதி யத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமான வொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூ ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக் கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்து டைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித் துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவி களில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடை யின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டு பிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப் பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குறுப்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பிற்கு ஏற்ப இலங்கை நிர்வாக சேவை I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட தரத்திற்கு தரம் உயர்த்தல்

2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2005.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறையாகும் 2005.10.28 ஆந் திகதிய இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பின் 3ஆவது பந்தியின் 2 ஆவது உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை அளவுக்கு அலுவலர்களை தரம் உயர்த்துவதற்காக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

2010.12.31 ஆந் திகதி வரை விசேட தரத்திற்கு தரம் உயர்த்தல் பிரமாணக் குறிப்பின் 17 (இ) உபபரிவிற்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

2. **தகைமைகள்**.- 2005.01.01 ஆந் திகதிக்கு இலங்கை நிர்வாக சேவை 1 ஆம் வகுப்பிற்கு உள்வாங்கப்பட்ட பின்வரும் தகைமகளை பூரணப்படுத்திய அலுவலர்கள் இதற்காக விண்ணப்பிக்க தகுதி கொண்டவர்களாவர் :-

I.(அ) பிரமாணக் குறிப்பின் 14 (1) ஈஇன் கீழ் அல்லது 19 (1) ஆஇன் கீழ் விதந்துரைக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) கிட்டிய 5 வருட காலத்திற்குள் எல்லா வேதன ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றிருத்தலும் எந்தவித ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் ஆளாகாதிருத்தலும்,

(இ) அத்தகைய அலுவலர்களின் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானதென ஆண்டு செயலாற்றுகை தரக்கணிப் பினூடாக வெளியிடல்.

இத்தகைய அலுவலர்களிலிருந்து விசேட தரத்தின் வெற்றிடங்களில் 80% நிரப்பப்படும்.

**குறிப்பு**:- 2005.11.14 ஆந் திகதிக்கு முன் விசேட தரப்பதவி யொன்றில் நியமிக்கப்பட்டிருந்த பிரமாணக்குறிப்பின் 14 (1) ஈ இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் 1 ஆம் வகுப்பில் 5 வருட சேவைக் காலத்தை கொண்டிராத போதும் இதன் கீழான வெற்றிடங்களுக்காக கவனத்திற் கொள்ளப்படுவர்.

II.(அ) 1 ஆம் வகுப்பில் 10 வருட காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

(ஆ) பிரமாணக் குறிப்பின் 14 (1) (ஆ) மற்றும் 19 (1) (ஆ) வின் கீழான தகைமைகளைப் பெற்றிருத்தல்.

(இ) தரமுயர்ப்பிற்காக தகமை அடையும் திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலத்திற்குள் எல்லா வேதன ஏற்றங்களையும் உழைத்துப்பெறுவதுடன் எந்தவித ஒழுக்காற்று தண்டணைகளுக்கும் ஆளாகாதிருத்தல்.

(ஈ) வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானதென ஆண்டு செயலாற்றுகை தரக்கணிப்பினூடாக வெளியிடல்.

இத்தகைய அலவலர்களிலிருந்து விசேட தரத்தின் வெற்றிடங்களில் 20% மானவை நிரப்பப்படும்.

**குறிப்பு**:- 2005.11.14 ஆந் திகதிக்கு முன் விசேட தரப்பதவி யொன்றில் நியமிக்கப்பட்டிருந்த எனினும் பிரமாணக் குறிப்பின் 14 (1) ஈ அல்லது 19 (1) (ஆ) வின் கீழான தகைமைகளை பூர்த்தி செய்திராத அலுவலர்கள் இடைக்காலத்தில் இதன் கீழான வெற்றிடங்களுக்காக கவனத்திற் கொள்ளப்படுவர்.

3. **நேர்முகப் பரீட்சை** .- நிரப்பப்பட உள்ள வெற்றிட எண்ணிக்கையைப் போல் இரு மடங்கிற்கு மேற்படாத எண்ணிக்கை கொண்டஅலுவலர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் மூவரைக் கொண்ட குழுவினால் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

4. **புள்ளித் திட்டம்** .- மொத்தமாக 100 புள்ளிகள் வழங்கப்படும்.

புள்ளிகள் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு வழங்கப்படும்:-

| | |
|---|---|
| (அ) சிரேஷ்டத்துவம் | 50 புள்ளிகள் |
| (ஆ) ஆற்றல்கள் | 40 புள்ளிகள் |
| (இ) நேர்முகப் பரீட்சை | 10 புள்ளிகள் |

***(அ) சிரேஷ்டத்துவம்*** - (50 புள்ளிகள்)

இலங்கை நிர்வாக சேவை மொத்தக் காலத்திற்கும் வருடத்திற்கு 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படுவதுடன் 6 மாதங்களுக்கு கூடிய காலத்திற்கு 1 புள்ளி வழங்கப்படும். 6 மாதங்களுக்கு குறைந்த காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. வேதனமற்ற விடுமுறை பெற்றிருக்கும் காலத்திற்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

***(ஆ) திறமை*** - (40 புள்ளிகள்)

(I) பட்டநிலைப் பின்படிப்புப் பட்டம் / பட்டநிலையின் படிப்புப் பட்ட டிப்பிளோமா/இலங்கை நிர்வாக சேவைக்கு சேர்வதற்கு தகைமை பெற்ற பட்டத்திற்கு பதிலாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட வேறு பட்டம்/வேறு தொழிற் தகைமைகள் - 25 புள்ளிகள்.

| | |
|---|---|
| கலாநிதிப்பட்டம் | 25 புள்ளிகள் |
| பட்டநிலைப்பின் படிப்பு | 20 புள்ளிகள் |
| பட்டநிலையின்பின் படிப்பு பட்ட டிப்பிளோமா | 15 புள்ளிகள் |
| (வருட காலத்தினதோ அதற்கு மேற்பட்டதோ) வேறு பட்டம்/தொழிற் தகைமை | 15 புள்ளிகள் |

(உயர் பட்ச புள்ளி 25 ஆகும். குறித்த தகைமைகளை 2005.01.01 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். உரிய சான்றிதழ்களை நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பித்தல் வேண்டும். விசேட தரத்திற்கு விண்ணப்பிக்க தகைமை கொண்ட பட்டநிலைப் பின்படிப்பு பட்டத்திற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.)

(II) இலங்கை நிர்வாக சேவைக் காலப் பகுதியினுள் 2005.01.01 ஆந் திகதி வரை அரச நிர்வாகம், முகாமை அரச கொள்கை, பொருளியல், சமூக அபிவிருத்தி தகவல் தொழில்நுட்பம், மற்றும் சேவையுடன் தொடர்பான வேறு பாடத்துறை சம்பந்தமான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் இரு கிழமைகளுக்கு குறையாத காலப்பகுதிக்கான பாடநெறியினைப் பயின்று பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சான்றிதழுக்கு 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்

15 புள்ளிகள்

சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

(இ) நேர்முகப் பரீட்சைக்கு 10 புள்ளிகள்

5. தகைமை பெற்றுள்ள I ஆம் வகுப்பு அலுவலர்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கு ஏற்ப பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை தலைவர்/அமைச்சின் செயலாளர் ஊடாக பொது நிர்வாக அமைச்சிற்கு 2006.12.22 ஆந் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பேரில்,

டீ. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக அமைச்சு.

எனதுஇல.: 76/1/15/விசேட
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2006, நவெம்பர் 6.

## இலங்கை நிர்வாக சேவை I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட தரத்திற்கு தரம் உயர்த்தல்

*(அ) பகுதி*

1. (i) முழுப் பெயர் :------.
(ii) பிறந்த திகதி :------.

2. (i) தற்போதைய பதவியும் அந்த பதவிக்கு நியமனம் பெற்ற திகதியும் (விசேட தரத்தின் பதவியொன்றை வகிக்கின்ற அலுவலர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட நியமனக் கடிதத்தின் பிரதியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்) :------.

(ii) அமைச்சு/திணைக்களம் :------.
(iii) அலுவலக முகவரி :------.

3. தகைமை பெறுவது சுற்றுநிருபத்தின் எந்த பிரிவிற்கேற்ப (சரியான பிரிவிற்கு ' 3' இடவும்)

| | |
|---|---|
| 2 (I) | |
| 2 (II) | |

4. பெற்றுள்ள தகைமை பற்றிய விபரம் :------.

5. தகைமை பூரணப்படுத்தப்படும் திகதி :------.

6. ..................................திகதிக்கு உடன் முந்திய 5 வருடத்தினுள் வேதன ஏற்றங்களை உழைத்துப்பெற்றமை தொடர்பான விபரம் :-

| வருடம் | சேவையாற்றும் இடமும் பதவியும் | வேதன ஏற்றம் உழைத்து பெறப்பட்டுள்ளது/ பெறப்படவில்லை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

மேற்படி தகவல்கள் சரியானவை என சான்றுபகர்கின்றேன்.

------
அலுவலரின் கையொப்பம்.

திகதி :------.

*(ஆ) பகுதி*

எனது இல. :

செயலாளர்,
.............................................அமைச்சு,

**திரு./ திருமதி/ செல்வி.........................................................**
**அவர்களை விசேட தரத்திற்கு தரம் உயர்த்தல்**

அலுவலர் மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் சரியானவை ;

1. (i) அலுவலர் கடந்த 5 வருட காலத்திற்குள் வேதனமற்ற விடுமுறை பெறவில்லை ;

(ii) 200........இருந்து ..............வரை கல்வி/ தொழில்/ வெளிநாட்டு வேதனமற்ற விடுமுறை பெற்றுள்ளார்;

2. (i) அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற் கொள்ளப்படவில்லை ;

(ii) அலுவலருக்கு எதிராக......................................திகதி ஒழுக் காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது/ஒழுக்காற்று விசாரணை இடம்பெறுகிறது;

3. திரு./திருமதி/செல்வி......................................... ன் வேலை/ வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானது. இவரது ஆண்டுச் செயலாற்றுகை தலைமைத்துவ ஆற்றல் மற்றும் அடுத்த தரஉயர்வின் போதான பதவி மற்றும் பொறுப்புகளை சுமக்கும் ஆற்றல் என்பவற்றை ஆராய்ந்து பார்த்தேன் குறித்த அலுவலரை இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்திற்கு தரம் உயர்த்துவதற்கு விதந்துரைக்கிறேன்.

கடந்த 5 வருடங்களாக செயலாற்றுகை தரக்கணிப்பீட்டு அறிக்கை பிரதிகளையும் இத்துடன் அனுப்பிவைக்கிறேன்.

------
திணைக்களத் தலைவரின்/நிறுவனத் தலைவரின்
கையொப்பமும் பதவிப் பெயரும்.

திகதி :------

**குறிப்பு :-** பொருத்தமற்றவற்றை கோடிட்டு வெட்டிவிடவும்.

***(இ) பகுதி***

எனது இல. :

செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

1. இலங்கை நிர்வாக சேவை I ஆம் வகுப்பு திரு./ திருமதி/ செல்வி......................................... அவர்களின் வேலை மற்றும் நடத்தை பற்றிய திணைக்களத் தலைவரின்/ நிறுவனத் தலைவரின் விதப்புரைகளுடன் நான் உடன்படுகின்றேன்./ உடன்படவில்லை.

2. அலுவலரின் வேலை/ நடத்தை/ விசேட திறமைகள் மற்றும் செயலாற்றுகை தரக்கணிப்பீடு என்பவற்றை மதிப்பீட்டுக்குட் படுத்தினேன்.

திரு./ திருமதி/ செல்வி.......................................................
.......................................... அவர்களை இலங்கை நிர்வான சேவை விசேட தரத்திற்கு தரம் உயர்த்த விதந்துரைக்கின்றேன்/ விதந்துரைக்கவில்லை.

........................................
செயலாளர்,

...........................................அமைச்சு.

திகதி.................

**குறிப்பு** :- விதந்துரைக்காவிடின் அதற்கான காரணத்தை சுருக்கமாக குறிப்பிடவும்.

(அ) பகுதி - குறித்த அலுவலரால்

(அ) பகுதி - உரிய திணைக்கள தலைவராலோ நிறுவனத் தலைவராலோ

(இ) பகுதி - உரிய அமைச்சின் செயலாளர்.

11-582

## திருத்தம்

### இலங்கைப் பாராளுமன்றம்

பதவி வெற்றிடங்கள்

2006.11.03 ஆந் திகதிய 1470 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் நிலவும் பதவி வெற்றிடங்கள் தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட வர்ததமானி அறிவித்தலின் 14 ஆம் பந்தியின் 14.1 மற்றும் 14.3 ஆம் பிரிவுகள் பின்வருமாறு திருத்தப்பட வேண்டும் :-

14.1 ***சம்பள அளவுத் திட்டம்.***- ஆண்டொன்றிற்கு ரூபா 1,08,480- 9 X 1,320/10 X 1,560/3 X 2,220- ரூபா 1,42,620 (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 18,900 ஆகும்.) திருப்திகரமான பத்து வருட சேவையைப் பூர்த்தி செய்த பின்னர் தளபாட மினுக்குநர் ஒருவர் சிரேஷ்ட தளபாட மினுக்குநர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்குத் தகுதி அடைவதுடன் ஆண்டொன்றிற்கு ரூபா 1,13,760/5 X 1,320/ 10 X 1,560/6 X 2,220- ரூபா 1,49,280 என்ற சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் அனைத்துப் படிகளுடனான ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூபா 19,800 ஆகும்.)

14.3 ***கல்வித் தகைமைகள்.***- க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், சிங்கள் /தமிழ் உட்பட ஆறுக்குக் குறையாத பாடங்களில் மூன்று (3) திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

***குறிப்பு.***- மேற்கூறப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பதவி வெற்றிடங்கள் தொடர்பாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2006, திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
2006, நவெம்பர் ஆந் திகதி.

11-77

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### இரத்மலானை - இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுநர்களை சேர்த்துக் கொள்ளல் - 2006

இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத பயிற்சி நிலையத்திற்கு 2006 ஆம் வருடத்திற்காக வேண்டிய பயிலுனர்களை சேர்த்தக்கொள்வதற்காக வேண்டிய இங்கு 2 ஆம்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த தராதரங்களை கொண்டுள்ள இலங்கை (ஆண்/பெண்) பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

2. **குறைந்த தராதரம் :**

(அ) ***வயது :*** 2006.05.31 ஆந் திகதியன்று 16- 25 க்கு இடைப் பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) ***கல்வித்தராதரம் :***- க. பொ.த. (சா/ த) பரீட்சையில் இரு தடவைக்ளுக்கு மேற்படாதவாறு சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்ளில் 2005.12.31 ஆந் திகதிக்கு முன்பு சித்தியடைந்திருத்தலும் அவசியமாகும்.

3. **பயிற்சி நெறி**.- பயிற்சிக்காக தேர்தெடுக்கப்படும் பயிலுனர்கள் கீழ்க் குறிப்பிடப்படும் தொழில் பயிற்சிக்குரிய காலவெல்லையில் பயிற்சியை மேற்கொள்ள இடமளிக்கப்படும். பயிற்சிநெறி நடாத்தப் படுவது சிங்கள மொழிமூலம் மாத்திரமாகும். கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி நெறிகளுக்கு 18 பேர்வீதம் தேர்ந்தெடுக்கப்படுவர்:-

(1) டீசல் என்ஜின் இயந்திரவியலாளர் - வருடம் 2 1/2
(2) பொருத்துனர் - வருடம் 3
(3) மின்னியலாளர் (சக்தி) - வருடம் 3 1/2

(4) இயந்திரவியலாளர் (பொது) - வருடம் 3 1/2

(5) மோட்டார் வாகன தொழில் நுட்பவியலாளர் - வருடம் 4

4. **விண்ணப்பம்.**- கீழுள்ள விண்ணப்பப்பத்திரத்திற்கேற்ப மி. மீ. 210 (ஏ 4) கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தில் பூரணமான விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். அவசியமான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பயிற்சி நெறிக்காக தேர்ந்தெடுத்தல்** .- (1) எழுத்து மூலம் மற்றும் செய்முறை மூலம் பரிசீலனை நடாத்தப்படுவதுடன், குறைந்த அவசிய கல்வித் தராதரமுள்ளவர்களும் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் செலுத்திய விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்து மூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(2) எழுத்துப் பரீட்சை கணிதம், அடிப்படை தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் கூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் அவ்வவ் பயிற்சி நெறியின் கீழ் செய்முறை/ நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(3) எழுத்து மூலம் மற்றும் செய்முறை பரீட்சையில் கூடியளவு முழு புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சி நெறிக்கு தேர்தெடுக்கப்படுவர்.

6. **பரீட்சை மொழி மூலம்** .- பரீட்சை சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

7. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்காக வேண்டி மீண்டும் செலுத்தப்படாத ரூபா 250 ஆன கட்டணம் அறவிடப்படும். அக்கட்டணத்தை மருதானை தபால் காரியாலயத்தில் மாற்றக் கூடியவாறு புகையிரத முகாமையாளர் எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை அல்லது சகல புகையிரத நிலையங்களிலும் அல்லது மருதானை பிரதான புகையிரத அலுவலகத்திலும் செலுத்த முடியுமாகும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட காசுக்கட்டளையை/ பற்றுச்சீட்டை விண்ணபதாரியினால் அனுப்பப்படும் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும். காசுக்கட்டளை அல்லது பற்றுச்சீட்டு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக்கு தோற்றாத அல்லது வேறெந்த காரணத்திற்காகவோ பரீட்சை கட்டணம் மீண்டும் வழங்கப்படமாட்டாது.

8. **பரீட்சை நிலையம்.**- சகல தராதரங்களையும் கொண்ட விண்ணபதாரிகளுக்கு எழுத்து மூலப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

9. **ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்.**- நிறவனத்தில் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் சகல விண்ணப்பதாரிகளும் தொழிலுக்குரிய பயிற்சிக் காலவெல்லைக்குள் பயிற்சியை மேற்கொள்வதாக தேசிய பயிலுனர் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரியுடன் ஒப்பந்தத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

10. பயிற்சியை பெறும் காலவெல்லையில் பயிலுனர்களுக்காக வேண்டி தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியளிக்கும் அதிகாரியினால் மாதாந்த கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும்.

11. பயிற்சியின் பின்பு பயிலுனர்களுக்கு தொழில் வழங்க புகையிரத திணைக்களம் பொறுப்பேற்காது.

12. கீழ்க் காணப்படும் மாதிரி விண்ணப்பப்பபடிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் "பணிப்பாளர், இலங்கை ஜேர்மன் புகையிரத பயிற்சிநிலையம், இரத்மலானை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தையிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இ.ஜே. பு ப. நி./2006" என குறிப்பிடப்படல் வேண்டும்.

13. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி.- விண்ணப்பப்பத்திரம் 2006.12.22 திகதி வரை ஏற்றுக்கொள்ளப் படுவதுடன், தாமதமாகி கிடைக்கும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

கே. ஏ. பேமசிறி,
புகையிரத முகாமையாளர்.

புகையிரத முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவை,
கொழும்பு 10,
2006.09.28

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இரதமலானை, இலங்கை - ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுநர்களை சேர்த்துக் கொள்ளல் - 2006**

அலுவலக உபயோகத்திற்காக

1. (i) முழுப் பெயர் (குடும்பப் பெயருடன்) (சிங்களத்திலும்/ ஆங்கிலத்திலும்) :-----.

2. முகவரி :- (சிங்களத்தில்) :-----
(ஆங்கிலத்தில்) :-----

3. மாவட்டம் :-----

4. பிறந்த திகதி :-----

5. பால் :- (ஆண்/பெண்):-----

6. கல்வித் தராதரம் - (க. பொ. த. (சா./தரம்) :-
முதல் தடவை
வருடம் :----- சுட்டெண் :-----

| | விடயம் | தேர்வு |
|---|---|---|
| 1. | ............................................. | .............................. |
| 2. | ............................................. | .............................. |
| 3. | ............................................. | .............................. |
| 4. | ............................................. | .............................. |
| 5. | ............................................. | .............................. |
| 6. | ............................................. | .............................. |
| 7. | ............................................. | .............................. |
| 8. | ............................................. | .............................. |
| 9. | ............................................. | .............................. |
| 10. | ............................................. | .............................. |

இரண்டாம் தடவை
வருடம் :----- சுட்டெண் :-----

| விடயம் | தேர்வு |
|---|---|
| 1. ................................................... | .................................... |
| 2. ................................................... | .................................... |
| 3. ................................................... | .................................... |
| 4. ................................................... | .................................... |
| 5. ................................................... | .................................... |
| 6. ................................................... | .................................... |
| 7. ................................................... | .................................... |
| 8. ................................................... | .................................... |
| 9. ................................................... | .................................... |
| 10. ................................................... | .................................... |

7. விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :-----

8. அறிவித்தலின்படி நீர் விரும்பும் தொழில் பயிற்சி இரண்டை முறையே குறிப்பிடவும்.

1. ...........................................
2. ...........................................

9. ...........................................தபால் அலவலகத்தில்/புகையிரத நிலையத்தில் 250 ரூபாவைச் செலுத்தி பெற்றுக்கொண்ட இலக்கம்...........................ஐக் கொண்ட காசுக்கட்டளையை/ பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன்.

10. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள்யாவும் உண்மையானவை யெனவும், சரியானவையெனவும் உறுதிமொழிகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மைக்கு புறம்பானது என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு கண்டு பிடிக்கப்படுமிடத்து இப்பயிற்சிக்கு நான் தகுதியற்றவரென்றும், தேர்தெடுக்கப்பட்டதன் பின்பு கண்டு பிடிக்கப்படுமிடத்து பயிற்சியிலிருந்து விலக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான்அறிவேன்.

...........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி...............................

11-302

---

## தொழில் திணைக்களம்

### தொழில் அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2006

தொழிற்றிணைக்களத்திற்கு தொழில் அலுவலர்கள் ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகள் மூலம் 2007, மாச்சு மாதம் கொழும்பில் நடத்தப்படும்.

2. **பதவிக்குரிய சம்பளத் திட்டம்.**- பொது நிருவாகச் சுற்றறிக்கை 06/2006 இன் படி தொழில் அலுவலர் சேவையின் II ஆம் I ஆம் வகுப்புகளுக்காக 2006.01.01 ஆந் திகதி முதல் உரிய சம்பளத் திட்டம்.- எம்என் 05-2006 15,785 - 10 X 290 - 15 X 325 - 11 X 400 - ரூபா 27,960 (மாதாந்தம்)

(நியமன திகதியிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் முதலாவது தடைகாணலும், நியமன திகதியிலிருந்து ஏழு ஆண்டுகளுக்குள் அல்லது சம்பளத் திட்டம் எட்டாவது சம்பள அளவிற்கு முன் II ஆவது தடை காணலிலும் சித்தியடைய வேண்டும்)

**குறிப்பு**.-ஆட்சேர்த்தல் II ஆம் வகுப்புக்கே செய்யப்படும். முதலவாது, இரண்டாவது தடை காணலில் சித்தியடைந்து மொழித்தகைமை (தமிழ், சிங்களம்) வாய்மூலப் பரீட்சையைப் பூர்த்தி செய்துள்ள சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள இரண்டாம் தரத்தில் 10 ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்துள்ள, பதவியுயர்வு திகதிக்கு முந்திய 5 ஆண்டுகளில் உரிய சம்பள ஏற்றங்களைப் பெற்றுள்ள, ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உள்ளாகாதவர்களாயிருப்பின் I ஆம் வகுப்புக்குப்பதவி உயர்த்தப்படுவர்.

3. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.**- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் :

(i) சிறந்த நன்னடத்தையையும் நல்ல தேக ஆரோக்கியத்தையு முடையவராக இருத்தல் வேண்டும் ;

(ii) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;

(iii) *திறந்த போட்டிப் பரீட்சைக்கான தகைமைகள் :*

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி யாக

(ஆ) சட்டத்துறையில் தொழிலில் ஈடுபடுவதற்கான தகைமை பெற்றுள்ள தொழில் தகைமை கொண்டவராக

(iv) *மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான தகைமைகள் :*

(அ) அரச சேவையிலோ மாகாண அரச சேவையிலோ எழுதுவினைஞர், அதனோடிணைந்த தரத்தில் அல்லது அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் ஓய்வூதியத்துடன் கூடிய 10 ஆண்டுகள் சேவைக் காலம் விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்திலோ அதற்கு முன்போ பூர்த்தி செய்துள்ள சேவையில் உறுதிப்படுத் தப்பட்டுள்ள அலுவலராயிருத்தல்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமென்றில் பட்டம் பெற்றுள்ள அரச சேவையிலோ மாகாண அரச சேவையிலோ எழுதுவினைஞர் அதனோடிணைந்த தரத்தில் அல்லது அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் நிரந்தர, ஓய்வூதியத்துடன் கூடிய 5 ஆண்டுகள் சேவைக் காலத்தை விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்திலோ அதற்கு முன்போ பூர்த்தி செய்துள்ள சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அலுவலராக இருத்தல்.

**குறிப்பு**.- இணைந்த தரங்கள் :-

(அ) இணைந்த சேவைகள் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழான பின்வரும் எந்தவொரு இணைந்த சேவைக்கு உட்பட்ட அலுவலர் :-

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை, மொழிபெயர்ப்பாளர்

(பொது எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், ஆவணப் பதிவாளர். காசாளர், பண்டசாலைப் பொறுப்பாளர் ஆகிய பதவிகளின் பெயர்கள் 2004.01.01 ஆந் திகதியிலிருந்து அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை தாபன விதிகளின் கீழ் ஒன்றிணைக் கப்பட்டுள்ளன)

(ஆ) பின்வரும் எந்தவொரு எழுதுவினைஞர் சேவைக்குமுரிய அலுவலர் :-

(அஞ்சல், புகையிரதம், பாராளுமன்றம், பாடசாலை, அரசாங்க அச்சகம், முன்னைய அரசாங்க வேலைகள் திணைக்களம், சுகாதாரம்)

(இ) மாகாண அரசாங்க சேவையில் மேற்கூறப்பட்ட அடிப்படைத் தகைமைகள் பெற்றுள்ள் கீழ்வரும் எந்தவொரு சேவையிலுமுள்ள அலுவலர் :

(அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையிலுள்ள அலுவலர்கள், எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், ஆவணப்பதிவாளர், மொழிபெயர்ப் பாளர், பண்டசாலைப் பொறுப்பாளர்.)

இணைந்த சேவைகள் தொடர்பான இறுதி முடிவு தொழில் ஆணையாளர் நாயகத்தினுடையது.

(v) விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்தில் விண்ணப்ப தாரிகளின் வயது 18க்குக் குறையாமலும் 45க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையிலோ, மாகாண அரச சேவையிலோ இருப்பவர்களுக்கு வயதின் மேலெல்லை ஏற்புடையதாகாது.)

4. **ஆட்சேர்ப்பு முறை**.- (அ) வெற்றிடங்களில் 50% மேலே 3 ஆம் பந்தியின் (iii) உப பந்தியில் குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையினதும் தொழில் ஆணையாளர் நாயகத்தால் தகைமை, சான்றிதழ் மற்றும் உடல் நலம் ஆகியவை பரிசீலனை செய்வதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளினடிப்படையில் நிரப்பப்படும்.

(ஆ) வெற்றிடங்களில் 50% மேலே 3 ஆம் பந்தியின் (iv) உப பந்தியின் கீழ் தகைமை பெற்றுள்ளவர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் எழுத்துப் பரீட்சை நடத்தப்படும். அந்த எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட முழுப் புள்ளிகளின் தகைமை அடிப்படையில் இப்பிரிவில் நிரப்பப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் 5 மடங்கிற்குக் குறையாத அளவினர் பின்வரும் சேவைக்கான புள்ளிகள், அனுபவ அறிவைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(i) **சேவைப் புள்ளிகள்**.- ஆட்சேர்ப்புத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படைச் சேவைக்காலம் முடிவடைந்த பின் அரச சேவையிலோ, மாகாண அரச சேவையிலோ, எழுதுவினைஞர் மற்றும் அதனோடிணைந்த தரங்களிலோ அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையிலோ சேவையாற்றியிருக்கும் ஒவ்வொரு வருடத்திற்கும் 2 புள்ளிகளின்படி மேலெல்லைப் புள்ளிகள் 50 ஆகும்.

(ii) தொழிற் சட்டங்கள் தொடர்பில் செயல்முறை அறிவைப் பரீட்சிப்பதற்கான பரீட்சை.

தொழிற்சட்டங்கள் தொடர்பான செயல்முறை அறிவைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளின் மேலெல்லை 50 ஆகும்.

எழுத்துப் பரீட்சை மற்றும் I, II இன்படி பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அளவினடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் ஆட்சேர்ப்பதற்கான தெரிவுகள் இடம்பெறும்.

(இ) பகிரங்க மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளிரண்டினும் அவற்றிற்குரிய ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40 புள்ளிகளோ அதற்குமதிகமாகவோ பெற்றுக்கொள்பவர்களைத் தெரிவுசெய்து அப்புள்ளிகளைக் கூட்டுவதன்மூலம் தகைமைப் பட்டியல் தயாரிக்கப்படும்.

5. **சேவை நிபந்தனைகள்**.- (அ) இப்பதவி நிரந்தரமானது. இணைந்த ஒய்வூதியச் சம்பள நிதியின் கீழ் சேர்க்கப்பட்ட ஒய்வூதியச் சம்பளத்திற்கு உரித்துடையதாகும். 2003.01.01 ஆந் திகதியிலோ அதற்குப் பின்னரோ புதியவர்களாக இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர் அரசாங்கத்தால் காலத்திற்குக் காலம் குறிப்பிடப்படும் விகிதத்தின்படி இணைந்த ஒய்வூதிய சம்பள நிதிக்கு உதவு தொகை வழங்க வேண்டும்.

2003.01.01 ஆந் திகதிக்கு முன் ஒய்வூதியத்துடன் கூடிய பதவியை வகித்த ஒருவர் இப்பதவிக்கு நியமனமாகின் அவ்வாறான ஒருவர் தொடர்ந்தும் ஒய்வூதிய சட்ட விதிகளின் கீழ் ஒய்வூதியத்திற்கான உரித்துடையவரென்பதுடன், விதவைகள்/ தபுதாரன்/ அனாதைகள் ஒய்வூதிய நிதிக்கு உதவு தொகை வழங்க வேண்டும்.

நியமனம் 3 ஆண்டுகளுக்குத் தகுதிகாண் காலத்திற்குட் பட்டதாகும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவரொருவர் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட்டால் அவர் ஓராண்டு காலத்திற்குப் பதிற் கடமையாற்றுவதன் கீழ் நியமிக் கப்படுவார்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்குக் கட்டுப்பட வேண்டும்.

(இ) தகுதிகாண் காலத்தில்/ பதிற் கடமையாற்றும் காலத்தில் அலுவலர்கள் கீழ்க்காணும் வினைத்திறமைகாண் தடை I, பரீட்சையில் சித்தியடைய வேண்டும் :-

(i) தொழிற் சட்டங்கள் I மற்றும் II ஆகிய பரீட்சைகள்.

(ii) தாபனக் கோவை (I ஆம் II ஆம் பகுதிகள்) நிதிப்பிரமாணங்கள் மற்றும் அலுவலக நடைமுறைப் பரீட்சை.

(iii) வாய்மூலப் பரீட்சை (சிங்கள/ தமிழ்) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும்.

(ஈ) வேறு சேவை நிபந்தனைகள் தொடர்பாக இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதியின் II ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவைக்கான பதவிகளுக்குரிய நியமனம் தொடர்பான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. **பரீட்சைத் திட்டம்.**- (அ) *பகிரங்கப் போட்டிப் பரீட்சை :*

(i) நுண்ணறிவு வினாத்தாள் (புள்ளிகள் 100) - காலம் 1 மணித்தியாலம்

(விண்ணப்பதாரிகளின் மொழியறிவு, கணித அறிவு, தர்க்கிக்கும் ஆற்றல், தீர்மானிக்கும் ஆற்றல் என்பவற்றைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட வினாத்தாளாகும். அதில் நோக்க முறையான (Objectivetype) வினாக்கள் 50 உள்ளடக்கப்படும்.

(ii) கட்டுரை மற்றும் சுருக்க வினாத்தாள் (100 புள்ளிகள்)

(உள்நாடு, வெளிநாடுகளின் முக்கிய அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் தொடர்பான புதிய விபரங்கள், தொழிலாளர் அமைப்புகள், தொழிலாளர் சாசனம் தொடர்பில் விண்ணப்பதாரிகளின் அறிவை அளவிடுவதற்கான 3 மணித்தியால வினாத்தாளாகும்.)

(ஆ) *மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை:*

(i) நுண்ணறிவு வினாத்தாள் (புள்ளிகள் 100) - காலம் 1 மணித்தியாலம்

(மேலே (அ) இல் (i) இன் கீழ் குறிப்பிடப்பட்டதன்படியான வினாத்தாளாகும்)

(ii) தொழிற் சட்ட வினாத்தாள் (100 புள்ளிகள்)
தொழிற் சட்ட வினாத்தாள் தொடர்பான அறிவினைப் பரீட்சிப்பதற்காகப் பின்வரும் தொழிற் சட்டங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட 3 மணித்தியால வினாத்தாளாகும்.

பின்வரும் தொழிற் சட்டங்கள் தொடர்பான வினாத்தாள் தயாரிக்கப்படும் :-

(i) 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்
(ii) 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகாரியாலய (ஊழியர்கள் வேதனத்தை ஒழுங்குபடுத்தும்) சட்டம்
(iii) 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க தொழில் பிணக்குகள் சட்டம்
(iv) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கஊழியர் சேமலாப நிதிச் சட்டம்
(v) 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிலாளர்களின் வேலையை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
(vi) 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நன்கொடை கொடுப் பனவுச் சட்டம்.

7. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்** .- (i) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக் கமைந்ததாயிருப்பதுடன், அத்தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி 8 1/2" x 12" (A4) அளவு தாளில் தயாரிக்கப்பட்டு விண்ணப்ப தாரியாலேயே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் முதலாம் பக்கத்தில் இலக்கம் 1 முதல் 5 வரையான பந்திகள் அடங்கக் கூடியதாகத் தயாரிக்கப்பட வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலமே விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் 2006.12.29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அத்தினத்திற்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அஞ்சலில் தொலையும் அல்லது காலதாமதான விண்ணப்பங்கள் தொடர்பில் அத்திணைக்களம் பொறுப்பேற்காது.

(iv) விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில் அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை 2006" எனக் குறிப்பிட்டு அனுப்பல் வேண்டும்.

(v) பரீட்சைக் கட்டணம் 300 ரூபா ஆகும். இப்பணம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு முன்னர் மாவட்ட செயலாளர் அலுவலகத்திலோ பிரதேச செயலாளர் அலுவலகத்திலோ வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 இல் வரவு வைப்பதற்காகச் செலுத்தப்பட வேண்டும். மாவட்டச் செயலாளர் அலுவலகத்திலோ, பிரதேச செயலாளர் அலுவலகத்திலோ பெறப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய பிரிவில் ஒட்டப்பட வேண்டும். பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை வைத்துக்கொள்வது பயனுடையதாகும்.

(vi) பரீட்சை இரத்துச் செய்யப்பட்டாலன்றி எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது. மேலும், இப்பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்தை வேறு பரீட்சைகளுக்காக மாற்ற முடியாது.

(vii) ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் மேலே (3) ஆம் பந்தியின் (iii) மற்றும் (iv) 'அ' 'ஆ' ஆகிய பிரிவுகளில் எப் பிரிவில் விண்ணப்பித்தாலும், திணைக்களத் தலைவரூடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்பதுடன், விண்ணப்பப் படிவத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள திணைக்களத் தலைவரின் சான்றிதழைக் கட்டாயமாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(viii) விண்ணப்பதாரிகள் இவ்வர்த்தமானி அறிவித்தலைக் கவனமாக வாசித்து விளங்கி விண்ணப்பங்களைப் பூரத்தி செய்ய வேண்டும். குறைபாடுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படு மென்பதைக் கவனிக்கவும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக்கவோ, வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ மாட்டாது. அவ்வாறே தாம் விண்ணப்பித்த ஊடக மொழி தவிர்நத வேறு மொழியூடாகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விடுக்கப்படும் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதைக் கவனிக்கவும்.

(ix) விண்ணப்பங்கள் எந்தத் தனிப்பட்ட முகவரிக்கும் அனுப்பப்படக்கூடாது. எவராவது விண்ணப்பதாரிக்குப் பரீட்சைத் தினத்திற்கு குறைந்தது ஏழு நாட்களுக்கு முன் அவரது அனுமதி அட்டை கிடைக்காவிட்டால் அவர் உடனடியாக "பத்தரமுல்லை, பலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின், பரீட்சை ஆணையாளர் நாயகத்தி"ற்குப் பின்வரும் விபரங்களுடன் காலம் தாழ்த்தாது அறிவிக்க வேண்டும். (*தந்திக்கான முகவரி :* பரீட்சை, பத்தரமுல்லை)

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ;
(இ) முகவரி ;
(ஈ) விண்ணப்பம் தபாலில் அனுப்பப்பட்ட திகதி, பதிவுத் தபாலின் இலக்கம் அது தபாலில் அனுப்பப்பட்ட அஞ்சல் அலுவலகத் தின் பெயர் ;

(உ) பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கமும், திகதியும்.

(x) விண்ணப்பதாரிகளின் கையொப்பம் பின்வருமொருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க உதவி பெறும் பாடசாலையின் அதிபர், முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், காவல் துறையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவிவகிக்கும் அலுவலர், பதவி நிலை தரப்பதவி வகிக்கும் அலுவலர், பௌத்த விகாராதிபதி, வேறு சமயங்களின் முதல்வர்கள் அல்லது பொறுப்பான பதவி வகிக்கும் எந்தவொரு சமயத் தலைவர்.

(x) பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படும் பயணச் செலவோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்பட மாட்டாது.

*8.* ***பரீட்சைக்காக உள்வாங்கல்*** .- (i) தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் அனுமதிப் பத்திரமும், நேர அட்டவணையும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் அவ்வனுமதிப் பத்திரத்தை பரீட்சை நிலையப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க முடியாத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ii) விண்ணப்பதாரிகள் தமக்குக் குறிப்பிட்ட பரீட்சை நிலையத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற முடியும். தமக்குரிய பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறு பரீட்சை நிலையத்தில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(iii) இப்பரீட்சைக்காக உள்வாங்குவது தகைமையென்று கொள்ளப்படமாட்டாது. பரீட்சையில் விண்ணப்பதாரிகளால் கைக்கொள்ளப்பட வேண்டிய விதிமுறைகள் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சகல விண்ணப்பதாரிகளும் அவ்விதி முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

*9.* ***பரீட்சார்த்திகளை அடையாளம் காணல்***.- சகல பாடங்களின்போதும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையக் கூடியதாகத் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களிலொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை;
(ஆ) இப்பரீட்சை நடைபெறும் நாளில் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

உரிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பான உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குரியது.

**குறிப்பு**.- மேற்கூறப்பட்ட ஆவணங்களிலொன்றைச் சமர்ப்பிக்க முடியாத அல்லது பிந்தும் எவராவது விண்ணப்பதாரியிருப்பின் அவர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார். அதனால் நேரகாலத்துடன் உரிய ஆவணங்களைத் தயார் செய்துகொள்ளுமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*10. தகைமை பற்றிய ஆவணங்கள்* .- (i) கேட்கப்பட்டுள்ள சகல விபரங்களும் விண்ணப்பதாரிகளால் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டும். இவ்வறிவித்தலிலுள்ள தேவைகளுக்கு உட்படாத விண்ணப்பங்களிருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

(ii) இறுதியாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தமது தகைமைகளை ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். அல்லது என்னால் கேட்கப்படும்போது அந்த ஆவணங்களைப் பதிவுத்தபாலில் எனக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்கள் அவசியமாகும் :-

(அ) நல்லொழுக்கம் கொண்டவர் எனப் பொறுப்புள்ள நபர்கள் இருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு (அரச சேவையில் இருப்போர் இச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை)

(ஆ) விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ், பதிவு செய்த குறிப்பின் உறுதிப்படுத்திய பிரதி.

**குறிப்பு** .- (i) பாடசாலைப் பயன்பாட்டிற்காகவோ, கல்வித் தேவைக்காக வோ வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழோ பிறப்புச் சான்றிதழைப் பதிவுசெய்யும் குறிப்பிலிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட ஆவணமோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ii) சத்தியக் கடதாசியோ, ஞானஸ்னான சான்றிதழோ பிறப்புச் சான்றிதழுக்காக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்த சான்றிதழ், வம்சாவளி மூலமான குடியுரிமை உள்ளதென்பதற்கான அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள வெளிப்படுத்தும் சான்றிதழ். (தேவையின்படி)

(ஈ) கல்வித் தகைமை தொடர்பான மூலச் சான்றிதழ்

(உ) அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகளால் அவர்களது சேவைக்காலம் தொடர்பான சான்றிதழ் (விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட சான்றிதழுக்கு மேலதிகமாக)

(ஊ) அடையாள அட்டை.

(iv) விண்ணப்பப்படிவத்துடன் மேற்குறித்த சான்றிதழ் எதையும் இணைத்தனுப்ப வேண்டாம். அச்சான்றிதழ்கள் சகலவற்றையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும்போது சமர்ப்பிக்க வேண்டும்.

(v) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது தேவையான சகல ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும்படி சகல விண்ணப்பதாரிகளுக்கும் அறிவுறுத்தப்படுகின்றது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போதோ என்னால் கேட்கப்படும்போது அந்த ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாதுவிட்டாலோ, தாமதிக்கப்பட்டாலோ அவ்வாறான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படும்.

*11.* **பொய்யான விபரங்களை வழங்குவதற்கான தண்டனை**.- இப்பரீட்சை விதிகளின்படி எந்தவொரு விண்ணப்பதாரியாவது தகைமையற்றவரெனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்போ பரீட்சையின்போதோ அதன்பின்போ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பத் தகைமை செயலற்றதாக்கப்படும்.

விண்ணப்பதாரி தெரிந்துகொண்டே பொய்யான விபரங்களை வழங்கியிருப்பதாகவோ அல்லது அவர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமையற்றவராக இருப்பினோ அவரது சேவைக் காலத்தின் எச்சந்தர்ப்பத்திலாவது ஒப்பிக்கப்பட்டால், அவர் உடனடியாகச் சேவையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலுள்ள அறிவித்தல்களில் ஏதாவது வேறுபாடுகள் இருப்பின் சிங்கள மொழி மூலம் வெளியாகியுள்ள அறிவித்தலே சரியானதாகக் கொள்ளப்படுமென்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பத்மினி ரத்நாயக்க,
பதில் செயலாளர்,

தொழில் உறவுகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.

2006.11.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]

(அலுவலகப் பயன்பாட்டிற்காக மட்டும்)

**தொழில் அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான *பகிரங்க/ *மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை - 2006**

*OPEN/LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT OF LABOUR OFFICERS IN LABOUR DEPARTMENT - 2006

(தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்)

1. 1.1 விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):-----.
(உ + ம்) SILVA, A. B.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

(இம் முகவரிக்குப் பரீட்சை அனுமதி அட்டை அஞ்சலிடப் படும்)

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழிலில்) :-----.

2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

3. 3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

[ | | | | | | | | | | ]

4. 4.1 பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி :-
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(உரிய எண்ணை அடைப்பில் எழுதவும்) (இதனை மாற்று வதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

4.2 பால் :-----.
ஆண் - 0
பெண் - 1 [ ]
(உரிய எண்ணை அடைப்பில் எழுதவும்)

4.3 இனம் :-----.
சிங்களம் - 1
இலங்கைத் தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
மலே - 5
வேறு - 6 [ ]
(உரிய எண்ணை அடைப்பில் எழுதவும்)

4.4 வர்த்தமானி அறிவித்தலின்படி தாங்கள் தோற்றுவது மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கா?/ பகிரங்க போட்டிப் பரீட்சைக்கா ?/ இரண்டுக்குமா ? என்பதைக் குறிப்பிடவும் :-

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 0
பகிரங்கப் போட்டிப் பரீட்சை - 1
இரண்டுக்கும் - 2 [ ]
(உரிய எண்ணை அடைப்பில் எழுதவும்) (இதனை மாற்று வதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

5. 5.1 பிறந்த திகதி :-
ஆண்டு : [ | | | ] மாதம் : [ ] திகதி : [ | ]

5.2 2006.12.29 ஆந் திகதியில் வயது :-
வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

5.3 2006.12.09 ஆந் திகதியில் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தமைபெற்ற முழுச் சேவைக்காலம் :-
(மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையின் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)
வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

5.4 தாங்கள் இலங்கைப் பிரசையாவது :-
வம்சாவளியாக - 1
பதிவின் மூலம் - 2 [ ]
(உரிய எண்ணை அடைப்பில் எழுதவும்)

6. தற்போது அரச சேவையில் பணிபுரியின் தாங்கள் வகிக்கும் பதவி :-----.

7. வர்த்தமானி அறிவித்தலின் (04) ஆவது பந்தியின் (அ) பிரிவு (ஆ) பிரிவின் எப்பிரிவின்/ பிரிவுகளின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுகின்ற தென்ற விபரம் :-----.

8. கல்வித் தகைமைகள் (தங்களுக்கு உரித்தாயின் மட்டும் குறிப்பிடவும்) :-

(1) பெற்றுக்கொண்ட பட்டம் :-----.
(2) பட்டம் பெற்ற ஆண்டு :-----.
(3) சட்டத்தரணியாகப் பணியாற்றுவதற்குத் தகைமை பெற்ற ஆண்டு :-----.

9. சேவை விபரம் (உரிய விண்ணப்பதாரிகளுக்காக) :-

| நிறுவனம் | பதவிப் பெயர் | காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

10. தாங்கள் அரச சேவையிலிருக்கும் அலுவலரெனின் எச்சரிக்கை தவிர வேறு தண்டனைகள் பெற்றிருந்தால் விபரம் :-----.

11. (அ) பரீட்சைக் கட்டணம் செலுத்திய மாவட்ட செயலகம்/பிரதேச செயலகம் :-----.

(ஆ) பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் திகதியும் இலக்கமும் :-----.

(பணம் செலுத்திய பற்றுச்சீட்டு கழன்றுவிழாதபடி ஒரு மூலையில் மட்டும் ஒட்டவும்)

| |
|---|
| பற்றுச்சீட்டு ஒட்டுவதற்காக |

12. **விண்ணப்பதாரியின் வெளிப்படுத்தல் :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எனக்குத் தெரிந்தவரை உண்மையானவையென்றும், சரியானவையென்றும் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள யாதாவதொரு விபரம் பொய்யானதோ தவறானதோ என நான் தெரிவாவதற்கு முன் வெளிப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாக்கப்படுவதற்கும், நான் இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட பின் அவ்விபரங்கள் பொய்யானவையென்றோ பிழையானவை என்றோ தெரியவரின் எச்சந்தர்ப்பத்திலும் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

(இ) இப்பரீட்சைக்குரிய சகல நிபந்தனைகளையும் கடைப்பிடிக்க நான் இணங்குகின்றேன்.

(ஈ) வர்த்தமானி அறிவித்தலின்படி பகிரங்க/மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு/ பகிரங்க, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் இரண்டிற்கும் தோற்ற நான் தகைமை பெற்றுள்ளேன்.

.........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

13. **(அ) விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல்:-**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ள திரு./ திருமதி/ செல்வி ..................................................................................................... ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிந்துள்ளேன் என்பதையும் அவர் எனது எதிரில் .................................. ஆந் திகதி அவரின் ஒப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிசெய்கின்றேன்.

.............................................................
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

**(ஆ) திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

எனது இல. :-----.

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ள திரு./ திருமதி/ செல்வி ..................................................................................................... பதவி வகிக்கும் அலுவலரென்பதையும், அவர் .......................... ............. ஆந் திகதி முதல் இவ்வலுவலகத்தில் சேவையாற்றுகின்றாரென்பதையும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

இப்பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்படின் இந்த .......................... .......................... சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது என்பதை மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

.........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

11-603

---

## இலங்கை தொழினுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு "ஆ" மற்றும் வகுப்பு II பிரிவு "அ" வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை -2003

இலங்கை தொழினுட்பவியல் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பிற்கு ஏற்ப மேற்படி பரீட்சைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2007 மார்ச் மாதத்திற்குள் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

(i) இப்பரீட்சைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) இந்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும். பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலின் தொடக்கத்தில் வேறாக அச்சடிக்கப்பட்டுள்ளது.

3. இப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிப்படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தத்தம்

விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அதன்படி அரசாங்க சேவை அலுவலர்களாயின் தமது திணைக்கள தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரச சேவையின் அலுவலர்களாயின் அவர்கள் சேவையாற்றும் மாகாண சபையில் அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயலாளர் ஊடாகவும் 2006 டிசெம்பர் 22 ஆந் திகதிக்கு முன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், அமைப்புக்கள், வெளிநாட்டுப் பரீட்சை கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு தமத விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பங்கள் முன் வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்பு கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

*4.* ***அடையாள அட்டைகள்*** .- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வண்ணம் தமது அடையாளத்தை பரீட்சார்த்திகளினால் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

மேற்படி ஆவணங்களில் ஒன்றையாவது முன்வைக்க இயலாத விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம்.

05. **விண்ணப்பப் படிவம்** .-(i) "ஏ4" அளவிலான ஒரு தாளில் விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும். இல. 01 முதல் 06 வரையிலான பிரிவுகளை முதலாம் பக்கத்தில் உள்ளடக்குதல் வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சில் பொறிக்கப்படினும் கூட, அதை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்தில் நிரப்பப்படுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்கு தோற்றும் மொழியிலேயே விண்ணப்பத்தை நிரப்புதல் வேண்டும். முதல் தடவையாக இப் பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதற்கு அடுத்த தடவைகளில் அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றுவதாயின் 90 ரூபா பெறுமதியான முத்திரைகளையும், ஒரு பாடத்திற்கு மாத்திரம் தோற்றுவதாயின் 50 ரூபா பெறுமதியான முத்திரைகளையும் விண்ணப்பத்தில் ஒட்டி தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அவற்றை பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் இக் கட்டணம் மீள செலுத்தப்படமாட்டாது: வேறேதேனும் பரீட்சைக்காக மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(ii) பரீட்சார்த்திகளுக்கு தமது விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மூல மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப் பரீட்சைக்காக பரீட்சார்த்திகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் விண்ணபித்தால் அம்மும்மொழிகளிலும் பரீட்சை நடாத்தப்படுவதுடன் பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் பதிலெழுதுதல் வேண்டும்.

(iii) ஓர் அலுவலர் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே தடவையில் தோற்ற முடியாது. எனினும் ஐந்து வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்து முதலாம் வினைத்திறன்காண் தடையில் சித்தியெய்திய வகுப்பு II பிரிவு "அ" வைச் சேர்ந்த அலுவலர்களும், வகுப்பு II பிரிவு "அ" வின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்குத் தோற்றலாம்.

6.விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள சகல அலுவலர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசிப் பிரதியுடன் அனுமதி அட்டையும் அனுப்பப்படும். பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பம் உறுதிப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறானதொரு அனுமதி அட்டை இல்லாது பரீட்சைக்கு தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை தினத்திற்கு குறைந்தபட்சம் 07 நாட்களுக்கு முன்பாவது அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடின் அது பற்றி உடனடியாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு (*தந்தி முகவரி:* பரீட்சை, கொழும்பு) பின்வரும் விபரங்களுடன் தெரியப்படுத்தல் வேண்டும் :-

(I) பரீட்சையின் பெயர்;
(II) பரீட்சார்த்தியின் முழுப்பெயர்;
(III) முழு முகவரி ;
(IV) விண்ணப்பம் அஞ்சல் செய்யப்பட்ட அஞ்சல் அலுவலகம்; பதிவு செய்யப்பட்ட இலக்கம், அனுப்பிய திகதி.

7. மேற்படி (06) வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னராக அனுப்பப்படும் ஆவணங்கள் கவனிக்கப்படமாட்டாது.

8. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாகவும் ஒவ்வொன்றுக்கு வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்த பட்சம் 40% புள்ளிகளையாவது பெறுதல் வேண்டும்.

*9.* **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்**.- 03 ஆம் இலக்கத்தின் கீழ் மாகாண அரசு சேவை அலுவலர்களின் பெறுபேறுகள் உரிய மாகாண அரசு சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடமும், அரசாங்க சேவை அலுவலர்களின் பெறுபேறுகள் உரிய அமைச்சு செயலாளரிடமும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

*10.* ***பரீட்சைத் திட்டம் :***

(1) வகுப்பு II பிரிவு "ஆ" வைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத் தாள்களைக் கொண்டதாகவிருக்கும்.

(அ) அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (நேரம் 2 மணித்தியாலயம்) - 100 புள்ளிகள்

(ஆ) நிதி ஒழுங்குவிதிகள் (நேரம் 2 மணித்தியாலயம்) - 100 புள்ளிகள்

முதலாம் வினாத்தாளுக்கான பாடவிதானம்

அலுவலக நிர்வாகமும், தாபன விதிக்கோவையும் (பாட இலக்கம் 01) இவ் வினாத்தாள் தாபன விதிக் கோவையின் பின்வரும் அத்தியாயங்களின் அடிப்படையிலானதாகவிருக்கும் :-

அத்தியாயம் II சேவைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் நியமனம்

அத்தியாயம் III இடமாற்றங்கள்

அத்தியாயம் IV மாதச்சம்பளம், தற்காலிக நிலை, நிரந்தரம், ஓய்வூதியங்களுக்கான உரித்துடைமை

அத்தியாயம் V விடுவிப்பு, பதவியில் மீள அமர்த்துகை, சேவை முடிவுறுத்தல்

அத்தியாயம் VIII மேலதிக நேரப்படிகள், விடுமுறை நாட்களும், விடுமுறை நாட்களுக்கான சம்பளங்களும் படிகளும்

அத்தியாயம் XII விடுமுறை

அத்தியாயம் XIII புகையிரத ஆணைச்சீட்டுக்கள்

அத்தியாயம் XIV தீவுக்குள்கடமை நிமித்தப் பயணம்

அத்தியாயம் XIX அரசாங்க வாசஸ்தலங்கள்

அத்தியாயம் XLVII பொது நடத்தையும் ஒழுக்கமும்

இரண்டாவது வினாத்தாளுக்கான பாடவிதானம் : (பாட இலக்கம் - 02)

**நிதி ஒழுங்குவிதிகள்** .- இவ் வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களின் அடிப்படையிலானதாகவிருக்கும் :-

(1) அத்தியாயம் I
செலவின, வருமான மதிப்பீடுகள் திரட்டிய நிதி வருடாந்த மதிப்பீடுகள், வருடாந்த மதிப்பீடுகளின் மாற்றங்கள் (நி. ஒ. 1-68)

(2) அத்தியாயம் III
நிதிமுகாமையும் பொறுப்புக்களும் பிரதான கணக்கீட்டு அலுவலர்கள், கணக்கீட்டு அலுவலர்கள், அரசிறை அலுவலர்கள் கொடுப்பனவுக்கான அதிகாரமளித்தல், அங்கீகாரம் வழங்குதல், உறுதிப்படுத்தல் அதிகாரங்களைக் கையளித்தல் (நி. ஒ. 124 - 147)

(2) வகுப்பு II பிரிவு **'அ'** வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டதாகவிருக்கும்.

(அ) அலுவலக நிருவாகமும் தாபன விதிக்கோவையும்
(நேரம் 2 மணித்தியாலயம்) - 100 புள்ளிகள்

(ஆ) நிதி ஒழுங்குவிதி
(நேரம் 2 மணித்தியாலயம்) - 100 புள்ளிகள்

முதலாம் வினாத்தாள்களுக்கான பாடவிதானம்

அலுவலக நிர்வாகமும், தாபன விதிக்கோவையும் (பாட இலக்கம் - 03)

இவ் வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களின் அடிப்படையிலானதாகவிருக்கும்.

அத்தியாயம் XV கற்கை நெறி, பயிற்சி அல்லது கடமையிலான வெளிநாட்டுப் பயணம்

அத்தியாயம் XVI விடுமுறைப் பிரயாணங்கள்

அத்தியாயம் XXIII குறிப்பிட்ட வகை நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கும் அரசாங்க அலுவலர்கள் சம்பந்தமான விசேட சலுகைகளும் அது பற்றிய நிபந்தனைகளும்

அத்தியாயம் XXIV சம்பளக் கடன்களும் முற்பணங்களும்

அத்தியாயம் XXV தொழிற்சங்க உறுப்பினர்கள்

அத்தியாயம் XXVII கடிதத் தொடர்பு வழிமுறைகள்

அத்தியாயம் XXVIII நிர்வாக நடைமுறைகளும் நியதிகளும்

அத்தியாயம் XXX அரச அலுவலர்கள் மீதான அரசாங்கத்தின் அதிகாரங்கள்

அத்தியாயம் XXXIII சட்ட ஆலோசனையும் சட்ட நடவடிக்கைகளும்

அத்தியாயம் XLVII பொதுவான நடத்தைகளும் ஒழுக்கமும்

அத்தியாயம் XLVIII ஒழுக்காற்று நடவடிக்கை முறை விதிகள்

அலுவலர்களின் செயலாற்றுகை, மதிப்பீடுகள் பற்றிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் ஏற்புடையதாகும்.

இரண்டாவது வினாத்தாளுக்கான பாடவிதானம்.

நிதி ஒழுங்குவிதி.- பாட இலக்கம் - 04

இவ் வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களின் அடிப்படையிலானதாகவிருக்கும் :-

(i) அத்தியாயம் VI- அரசாங்க நிதி முதலியவற்றிற்கான பொறுப்பு, கட்டு நிதியும் வங்கிக்கணக்குகளும், அரசாங்க நிதிப் பாதுகாப்பு, மீளாய்வு சபைகள், மேலதிகப்பற்று, வங்கிக்கணக்குகள் (நி. ஒ. 315-396)

(ii) அத்தியாயம் XIII - வழங்கல்கள், வேலைகள், சேவைகள் : வழங்கல்கள் / கொள்வனவுச் செயற்பாடு, பண்டசாலை மீளாய்வுகள், பண்டசாலைப்படுத்தல் ஒப்பந்தங்கள் கேள்வி நடைமுறை (நி. ஒ. வி 708 இருந்து 775 வரை)

11. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயத்திலும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2006.11.08

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

*இலங்கை தொழினுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு "ஆ" மற்றும் வகுப்பு II பிரிவு "அ" வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2003*

1. (அ) முதலெழுத்துக்களுடனான பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் குறிப்பிடவும்)

(ஆ) முழுப் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் குறிப்பிடவும்)

(இ) முதலெழுத்துக்களுடனான பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில் தெளிவான எழுத்தில் குறிப்பிடவும்)

(ஈ) அலுவலக முகவரி :-----.
(பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இம்முகவரிக்கு அனுப்பப்படும்) (ஆங்கிலத்தில்)
(சிங்களத்தில்/தமிழில்)

(உ) பரீட்சைக்குத் தோற்றும் மொழி :-----.
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

(ஊ) பால் (பெண்/ஆண்) :-
(ஆண் - 0/பெண் - 1)
(பொருத்தமான எழுத்தினைக் கூட்டினுள் குறிப்பிடுக)

(எ) நீங்கள் விண்ணப்பிக்கும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை :-
(II 'ஆ' - 0, II 'அ' - 1)
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

2. நீங்கள் மாகாண அரச சேவையைச் சார்ந்தவரா? அல்லது அரச சேவையைச் சார்ந்தவரா ? :- (பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

(அரசாங்க சேவை - 1, மேற்கு - 2, தெற்கு -3, மத்திய - 4, வடமேல் -5, சப்பிரகமுவா - 6, ஊவா -7, வடமத்திய - 8, வடகிழக்கு - 9)

3. தோற்றும் பாடம்/பாடங்கள் :-
(அ) வகுப்பு II "ஆ" பிரிவின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்காக தோற்றும் பாடங்கள் :-----.

| *பாடம்* | *பாட இலக்கம்* |
| --- | --- |
| -----. | |
| -----. | |

(ஆ) வகுப்பு II 'அ' பிரிவின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கு தோற்றும் பாடங்கள் :-----.

| *பாடம்* | *பாட இலக்கம்* |
| --- | --- |
| -----. | |
| -----. | |

4. (i) பிறந்த திகதி :-
வருடம் : மாதம் : நாள் :

(ii) 2006.12.22 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

5. (i) பதவிப் பெயர் :-----.

(ii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பும், தரமும் :--.
(I, II அ/ஆ என்ற வகையில் உள்ளடக்க வேண்டும்)

6. நீங்கள் எத்திணைக்களத்தைச் சேர்ந்தவர் :-----.

ஒரு பாடத்திற்காக 50 ரூபா பெறுமதியான முத்திரைகளையும், முழுப் பரீட்சைக்காக 90 ரூபா பெறுமதியான முத்திரைகளையும் ஒட்டி தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு பெறுமதி நீக்கம் செய்யவும்.

மேற்போந்த விபரங்கள் சரியானவை எனவும் மேற்காட்டப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன்.

................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

குறிப்பு.- விண்ணப்பதாரி ஒருவர் திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பாக அதிகாரம் பெற்றுள்ள அலுவலர் முன்னிலையில் தனது கையொப்பத்தை இடவேண்டும்.

**கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல்**

எனது அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./திருமதி/செல்வி ................................ ............................................................................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று சான்றுபடுத்துகிறேன்.

..........................................................
கையொப்பத்தை சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

மேற்போந்த இல. 1 முதல் 6 வரையான பந்திகளில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப்பரீட்சார்த்தி இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையுடையவர் என்றும் அவரால் தரப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

..........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப் பெயரும்.

திகதி :-----.

11-652

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.